
# ராஜா



# சமர்ப்பணம்

உதிரத்தை உயிராய் ஊட்டி அன்பு மழை பொழிந்து

நலமாய் வாழ வழி வகுத்து ஆதரவாய் இருந்தெமை

கைவிட்டு கண்ணீர்ப்பூக்களை மண்ணில் தூவி

ஏங்கவைத்து பிரிந்துவிட்டீர்! ஆறாப் பெருந்துயரில்

ஆழ்த்தியெமை மீளாத்துயில் கொண்டீர்!

அன்புதனை சீரோங்க கொடுத்து இறைவனுடன்

இன்புற இணைந்து விட்டீர்!

பாசப்பிணைப்புதனில் மூழ்கி

உம் நினைவால்

பரிதவிக்கும் நாம் எம்

படைப்புக்களை உங்கள்

பாதக்கமலத்திற்கு காணிக்கையாய்

சமர்ப்பணம் செய்கின்றோம்.



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

அமரர்

# திரு.சிவநேசராஜா ராஜகுலேந்திரன்

**(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்,**
**President of Bridge Mart, Secretary of Bridge Market,**
**Managing Director of Keerthika Enterprises & Sajera Products Pvt.(ltd))**



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 | 28 |
| 10 | 08 |
| 1951 | 2019 |


திதி வெண்பா

ஸ்ரீ விகாரி வருடம் நிகழ் ஆவணிமாத பதினோராம் தினம்
புதன் வாரம் திரயோதசி திதிசேர் பிரதோஷ நன்னாளில்
உயர்குடி பிறந்த சிவனேசராஜா இராஜகுலேந்திரன்
உளம் நெகிழ நற்கதி சேர்ந்தனன் இனிதே

### விநாயகர் துதி

**திருச்சிற்றம்பலம்**

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடி போற்றுகின்றேனே.



## தேவாரம்

கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதுந்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே

## திருவாசகம்

முக்திநெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனைப்
பக்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்வறுவார் அச்சோவே



# திருவிசைப்பா


கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாக்கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிரவென் கண்கள் குளிர்ந்தனவே

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில
வல்லானுக்கே பல்லாண்டு கூறுதமே

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேலுன்னை யென்றும்
மறவாமை வேண்டுமின்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறிவா நீ யாரும் போதுன் அடியின் கீழிருக்க வென்றார்




# திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் தேனமுகத் துணற்வூறி
இன்பரசத் தேன்பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தனைவோனே
தந்தைவயற் தாலருள்கைக் கனியோனே
அம்பர்தமக் காலநிலைப்  பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



# ஜென்ம நினைவலைகள்



**தேமதுரத்** தமிழ்பாயும்
மீன்பாடு வளமிகுகிழக்குதேச வாவிசூழ்
மட்டுநகர் மருதநிலப்புகழ் கொள்
குடியாம் களுவாஞ்சிக் குடிதனில்
உயர்குடி சைவவேளாளர்
பதி கொண்ட புனிதனாய்
கிளாக்கர் நிறை குடும்பம்
எனப்போற்றும் திரு.திருமதி.
சிவனேசராஜா வள்ளிமுத்து
தம்பதியினருக்கு
தனிச்சன் ஆண்பிள்ளையாய்
ஆயிரத்து தொள்ளாயிரத்து
ஐம்பத்து ஓராம் ஆண்டு – பெற்றவர்
உளம் குளிர் வாரிசாய்
குலம்தனை மகிழ்விக்கும் இராசாவாய்
பிறப்பெடுத்தனன் இராஜகுலேந்திரன்.
பெயர் போற்றும் ஆறு சகோதரிகள்

அவர்களின் நேசமிகு இளவலாய்
வான்நிறைத் தனித்திங்களாய்
பெருமைகொள் உயர்குலத்தினில்
ஆரம்பம் அவர் வாழ்க்கை.
உள்ளமெனும் காட்டாறு உந்திவர
பெற்றவர் போற்றும் பெருமை மிகு
பிள்ளையாய் – அமைதியின் இமயமாய்
ஆனந்த உறைவிடமாய்
எழில்கொள் குடும்பத்தின் ஆணரசனாய்
திகழ்ந்தது அவரின் ஆட்சி.
அக்காமார் யோகம், பரமேஸ்வரி, அருந்ததி, இராஜகுமாரி
ஆகியோரின் ஆசைமிகு தம்பியவர்.
பாசமிகு தம்பிதனை அழகழகாய் உடையணிவித்து
அழகுபார்த்து உணவூட்டி வளர்த்த காலம்
நினைவிலிருந்து நீங்கா பொற்காலமது.
தாய் வள்ளிமுத்துவிற்கோ இன்னுயிர் மகனவர்
கண்ணும் கருத்துமாய் தன்னுயிர் ஈந்து காத்து
சிறப்புமிகு சீமானாய் வளர்த்தார்
தங்கைமார் சித்திரா ரஞ்சனாவின் பற்றுநிறை தமையனவர்
கவசமாய் இருந்து பாசமழை பொழிந்து பாதுகாப்பாய் இருந்தார்
கற்றது பயனறிய கல்வியில் வல்லவராய்

ஆரம்பக்கல்வி தனை மட்/ பட்டிருப்பு மகாவித்தியாலயத்தில்
கடந்தேறி உயர்நிலைக்கல்வி பெற்றார்
அரசினர் கல்லூரிதனில்
முத்தமிழ்க்கலை வல்லவராய் இசைப்பிரியராய்
கலைகள் கருத்துடன் கற்று பெற்றோர்
பெருமைசேர் கற்றாளனானார்.
ஆர்வமுடன் மேன்நிலைப்பள்ளி – கல்கமுவையில் (புயடபயஅரறய)
தொழில்நுட்ப துறையில் தேர்ச்சி
ஊர்போற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரானார்

சீர்புகழ் வாழ்வுதனில் மாற்றமது சோகமானது
தந்தையின் இழப்பது பாரமானது
கடமை தவறா குடும்பச்சுமையை இனிதாய் ஏற்றார்
தன்தோள் சாய்த்து குடும்பத்தை தலை நிமிர்த்தினார்
தந்தையின் சொல்பேசும் ராசாவாய்
சகோதரிகளை பேணிப்பாதுகாத்தார்
தாய்மெச்சும் தனிராசா வாய்ச்சொல் கேலி
பேசி இன்புற மகிழ்ந்திடுவார்
உறவுகளை நேசித்த உன்னத உறவுஅவர்
உற்றார் உறவினர் மரியாதை பிரஜையவர்
மருமக்கள் இன்முகம் காண நினைத்த பொருள் வாங்கிக்
கொடுக்கும் ஈகைவேந்தனவர்
ஆதனால் பெயர் பெற்றார் "அச்சா" மாமாவென

ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி ஒன்று
வாலிபன் வாழ்வுதனில் இனிய பொற்காலமது
சினேகிதர் மனோகரன், மனோகரியின்
அன்புத் தங்கை இனியனாள் ஜெயகரியின்
கரம் பற்றினார்

இன்பமுறு இல்வாழ்க்கையை அன்புற ஏற்றார்
மனைவியின் உயிர்ச்சிகரமாய்
பாசமிகு கொண்டு கருத்துடனே குதூகலமாய்
குடும்பத்துடன் இல்லறம் காத்தார்
சதீஸ், தர்மிலா, கீர்த்திக்கா, குலதீஸ், துஷித்தா
எனும் நன்மக்கள் பெற்றெடுத்து
பாசமிகு தந்தையானார்

பக்குவமாய் மீதிக்காலம் மட்டக்களப்புதனில்
புகழ்ஓங்க தொழில் செய்து தலைநிமிர்ந்த காலம்
பலர்போற்ற உழைப்பால் தன்னிலை நாட்டிய காலம்
உள்நாடன்றி வெளிநாடாம் நைஜீரியாவிலும்
தொழில்பெற்று சிறப்புற உழைத்த காலம்
உழைப்பை உரமாக்கி கீர்த்திக்கா என்ரபிரைஸ்
வியாபாரம் வெற்றியின் பெருமை திறமை என
வியந்த பொற்காலமது!

பிள்ளைகள் பெரியவராகி தன்னம்பிக்கையுடன்
தொழில்பெற்று உயர்வுற்றதால்
மாண்புறு குழந்தைகளை ஈன்ற தந்தையென
மார்தட்டி நின்றார் பெருமையுடனே
கடமைகள் சிறப்புடன் செய்து மனம்போல்

நன் மருமக்கள் பெற்றார்
அருண், கிரிதரன், மனோத்தியா, சந்தியாவின்
மாமா என்றாலும் தந்தைக்கும் மேலானவர்
கேஷாங்கன், கிரிஷாங்கன், லிசாங்கன், ஹர்சிந்தின்
செல்லமிகு பாட்டனாய்
விளையாடிய பொழுதுகள் தான்
சிந்தை நின்று விலகுமா?

இளைய மகன் திருமணமாம் இறுதியாக
இளம் இணையாய் கலகலப்புடன்
கதைகள் பேசி ஜெயாவுடன் கைகோர்த்து
வலம் வந்த பொழுதுகள் மறக்க இயலுமா?
ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஆறு
இயந்திர வாழ்க்கைக்கு இதமான ஓய்வூதியம்
ஓய்வு முடிவல்ல வாழ்க்கையின் ஆரம்பமென
தேர்ந்தெடுத்தீர் சுயதொழிலை
சஜேரா (SAJERA Products) எனப்புகழ் பெற்ற
உணவுற்பத்திப் பொருள்
சுத்தமாக தன்கைப்பட தயாரித்ததனால்
விருதுபல பெரிதாய் பெற்றீர்!
அதனால் பதவி Bridge Martற்கு தலைவர்

கொடிகட்டிப் பறந்த சுயவியாபாரம்

தனித்தலைவனாய் மனைவியுடன்

ஓடி ஓடி உழைத்து களைத்து ஓய்ந்தீரோ இன்று!

அயராது தொடர்ந்தது சமூகப்பணி

Lions Club அங்கத்தவராய் பெருமையுடன்

செவ்வனே பணியாற்றி பெருமையுற்ற பேராளன்

எந்நிகழ்வாயினும் தனிச்சிறப்புடன்

வியக்குமளவு மனமார

சிறப்பிக்கும் சீராளன்

கிடைத்தற்கரிய பொக்கிஷமாய் குடும்பத்தினை

கலகலப்புடன் இன்பமாக

தலைநிமிர்ந்து வழிநடத்துகையில்

யார் கண்தான் பட்டதுவோ!

நோய்வரக் காலனும் பின்தொடர்ந்து

கண்கவர்ந்து சென்றது ஏனைய்யா?

# புலம்பல்

நாச் சொல் கடல்போல் வார்த்தையுள்ள

சிரிக்க வைக்க பேசுவதில் சீமான் தனிரகமே

விரும்பியனைவரையும் வாரியணைத்து

விருந்து கொடுப்பதில் உமக்கு யார் நிகர் ஐயா!

வேதனை கண்ணீராய் உதிரத்தில் வழிந்தோட

ஆற்றமுடியா துன்பமாய் எம்மை விட்டு

பிரிந்து சென்றது ஏனைய்யா?

இளையமகள் துஷித்தாவோ பட்டக்கல்வி தன் திறமையால்

பெற்றாள் என பெருமையுற்று பெயர்பெற்று நின்ற அவளை

இன்று தனித்துவிட்டு பறந்து சென்றது ஏனைய்யா!

நிலையிலா மண்ணுலக வாழ்வுதனை

மனந்தேறி உணர்த்தி இன்று

விண்ணுலகம் சென்றீரோ!

யார் அழுதும் என்ன பயன் அதுவே விதிப்பயன்!

மாதவன் தீர்ப்பு அது காலம் தேற்றி பதில் சொல்லட்டும்!





# தேறல்

ஆன்மா என்பது அழிவில்லாதது
வாளால் கீறவும் வளரும் நெருப்பால்
எரிக்கவும் ஒண்ணா இயல்புடைத் தான்மா;
உடலும் என்றோ ஒருநாள் அழியும்
தானழிக் காவிடின் தானே அழியும்
ஒருடல் துறந்துமற் றோர் உடல்புகுந்து
ஆன்மா என்றும் அழிவிலா திருக்கும்
புதுப்புது உடல்களில் பூத்துக்குலுங்கும்
இயற்கையை எண்ணி நீ இட்டதோர் பணிசெய்
இது நம் கடமை என்றுள்ளம் உரைத்தாலும்
உதிர்க்கும் கண்ணீரை யார் நிறுத்த வல்லவரோ?
காலமது பதிலுரைக்கும் அதுவரை காலமும்
அச்சாவின் ஆன்மா எம் இதயத்தை இதம் செய்யும்
ஊனோடு உயிராகி எம்முயிர் மூச்சில் நீர் இருப்பீர்!

# மனைவி பிரலாபம்

**என்** அன்பிற்குரியவருக்கு,

உங்களுடன் வாழ்ந்த வாழ்க்கையை எப்படி எழுத்தில் எழுதுவதென்றே தெரியவில்லை. நாம் முதலில் சந்தித்தது முதல் இறுதிவரை நம்மில் இருந்த அன்பு, பாசம் குறையவேயில்லை. என்னைப் பொறுத்தவரையில் நான் தனித்து எங்குமே பயணம் சென்றதில்லை. இருவரும் சேர்ந்துதான் செல்வோம். மேல்வீட்டில் தனிமையில் இருவரும் எப்படிச் சந்தோசமாக வாழ்ந்தோம் என்பதை எழுத்திலோ, வார்த்தையிலோ சொல்ல முடியவில்லை. எப்பொழுதும் தனகிக் கொண்டேயிருப்பார். எப்பொழுதும் அவருக்கு சேவை செய்து கொண்டே இருப்பேன். அது எனக்குச் சந்தோசமாகத்தான் தோன்றும். அவர் பிரிந்திருந்ததென்றால் வெளிநாடு சென்ற அந்த ஐந்து வருடமும் தாங்கமுடியாத வேதனையை அனுபவித்தேன். அந்த நாட்களில் வரும் கடிதத்தில் கவிதையில்லாத கடிதமே இல்லை. ஒவ்வொரு கடிதத்திலும் மனம் உருகி வர்ணித்திருப்பார். இரவில் பதினொரு மணிக்குத்தான் பக்கத்து வீட்டில் டெலிபோன் ஒலி கேட்கும். அந்த வீட்டு அங்கிள் கதவைத் தட்டி உங்களுக்கு டெலிபோன் என்று கூறினால். பாய்ந்து போய் அவருடன் கதைத்து விட்டு வருவோம். அப்பா திரும்பி வரும் போது கார் விபத்தில் நடப்பதற்குக் கஷ்டப்பட்டு வந்தார். ஆனால் பிரிந்த நாட்களை விட சேர்ந்த பின் வாழ்ந்த நாட்கள் ஆனந்தமானவை. ஜெயா என்று ஆசையாக கூப்பிடுவதற்கும் என் அன்புத் தெய்வமில்லையே. எங்குதான் ஓடி மறைந்தீங்களோ தெரியவில்லை.

கடைசி நிமிடம் ஆஸ்பத்திரியிலும் இரண்டுமுறை ஜெயா, ஜெயா எனக் கூப்பிட்டு எனது கையைப் பிடித்துக் கொண்டிருந்தீர்கள். எப்படி என்னை விட்டுப் பிரிந்தீர்கள் பிரிவதற்கு எப்படி மனது வந்தது? கடவுள் எனக்கு ஏன் இப்படி ஒரு தீர்ப்பைப் தந்தார் என்று தெரியவில்லை. என் வாழ்க்கை முடியும் வரை கண்ணீரிலேயே முடியும். என்னால் நீங்கள் இல்லாத வாழ்க்கையை வாழ்வதற்கே பிடிக்கவில்லை. கடவுளின் தீர்ப்பு என்று தான் கண்ணீருடன் இருக்கின்றேன். ஒவ்வொரு நிமிடமும் உங்கள் நினைவாலே வாடுகின்றேன். இனிமேலும் எழுத முடியவில்லை நெஞ்சம் பாரிக்கின்றது. என் அன்புச்செல்வமே எங்கு சென்றாய்....?

உங்கள் பிரியமான

**ஜெயா**

**அழகைப் பற்றி கனவு காணாதீர்கள் அது உங்கள்**

**கடமையை பாழாக்கிவிடும்**

**கடமையை பற்றி கனவு காணுங்கள் அது**

**உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்.**

# அன்பு அப்பா

**சுயநலமில்லாத** அன்பின் வடிவமே என் அப்பா
அன்பை உள்ளேவைத்து வெளியில் காட்டிக் கொள்ளாத
பாசமான உறவுதான் என் அப்பா
இந்த உலகில் அம்மாவை விட அன்பு காட்டும்
ஒரே உறவுதான் என் அப்பா!

தலை மகனான நான் அழும் போதெல்லாம்
அரவணைத்து ஆறுதல் சொன்ன நீங்கள்
இன்று அழும்போது ஆறுதல் சொல்ல நீங்கள் இல்லையே அப்பா
என் அப்பா, எனக்காகச் செய்த தியாகங்களும்
கஷ்டங்களும் நான் அடைந்த வெற்றிக்குள்
அடங்கி நிற்கின்றதே!

எனக்காக எத்தனை உறவு இருந்தாலும்
என் அப்பாவைப் போல் யாரும் இருக்க முடியுமா?
உங்கள் கையைப் பிடித்து உலகைச் சுற்ற
ஆசைப்பட்டேனே அப்பா – ஆனால் இன்று
உங்களைச் சுற்றி மூன்று முறை நடந்து
கடமை செய்ய வைத்து விட்டீர்களே அப்பா

ஒரு மனிதன் மரணிக்கும் வரை இயங்கிக்கொண்டிருக்க வேண்டும்
இயங்கி கொண்டிருக்கும் போதே மரணிக்க வேண்டும்
இதை சொல்லும் போது புரியவில்லை
இப்போது புரிகின்றது இதன் அர்த்தம்

நீங்கள் காட்டிச் சென்ற அன்பையெல்லாம்
பல மடங்காக திருப்பித் தருவதற்கு நீங்கள்
என் மகனாக வரவேண்டும் அப்பா!

அன்பு மகன்
**சதீஸ்**





# அப்பா

**பூவுலகம்** அறிந்திட உயிரளித்த உறவு
பூவைப் போல் எம்மைப் பேணிக் காத்தவர்
அளவற்ற முயற்சி அவரது அடிச்சுவடுகள் சொல்லும்
தாயின் செல்லப் பிள்ளை ஆனால் குடும்பத்தின் ஆணிவேர்

கனிவான பேச்சினால் கோடி நண்பர்கள்
கண்டிப்பாகவே எம்முன் தோன்றினீர்
ஓயாத உழைப்பால் உயர்வடைந்து நின்றவர்
வறுமை தெரியாமல் அள்ளிக்குவிப்பார்

தனியாக எம்மைப் பிரிந்து தூர தேசம் சென்றபோது
தாய் பட்ட வேதனையை தனியாக அறிந்திருந்தீர்
வீடு திரும்பிய நாளே எம்வாழ்வில் திருவிழா
களிப்பான அந்நாளை மறக்கவே முடியாது

நாடி வரும் விருந்தினரை ஓடி ஓடி உபசரிப்பீர்
கூடி இருந்து உண்பதை பாக்கியமாய்க் கருதுவீர்
வித்தியாசமான சமையலை உம்மிடமே பழகினேன்
என்போல் விருந்தளிக்க என் மகளுக்கே தெரியும் என்பீர்

அப்பாவைப் போலவே குணமும் கோபமும்
அப்படியே உள்ளதென என் கணவர் கூறி நிற்பார்
தன்மானத்தை இழக்காத சில கோபங்கள் நியாயமானதே
பாத்திரமறிந்து தர்மம் செய்யும் உம் குணம் மேலானதே

எத்தனை சண்டைகள் பிடித்திருப்பேன் உம்முடன்
அக்கறையாகவே எப்பொழுதும் நடந்தீர்
உடலை வருத்தி எதற்காக Bridge mart எனக் கேட்டதற்கு
விரும்பியே செய்கின்றேன் தடுக்காதே என்றீர்

பொறுப்பான பிள்ளையாய் என்னை வளர்த்தீர்
என் விருப்பப்படியே திருமணம் முடிக்க சம்மதித்தீர்
என் குழந்தைகளைப் பொன் போலத் தாங்கி நின்றீர்
சிறு இதயங்கள் துடி துடிக்க எம்மைப் பிரிந்திட்டீர்

விட்டுச் செல்லும் முன்னே எத்தனை அறிவுரைகள்
எப்படி யாவது பிள்ளைகளைப் படிக்க வைத்துவிடு
முயற்சியெடுத்தாவது வீட்டை முடித்துவிடு என்று
பக்குவமாய் எதற்காகக் கூறினீர் புரியவில்லையே அன்று

தன்னம்பிக்கையை ஊட்டி வளர்த்த உங்களால்
ஒரு விரல் போனதை ஏற்றுக்கொள்ள முடியவில்லையே
காலனைக் காலடியில் போட்டு எம் கைகளைக் கட்டிவிட்டீர்
தைரியத்தை நீர் இழக்க தவித்து நின்றோமே

எப்டியாவது உம்மைத் தேற்றிட என் கணவர் என்ன பாடுபட்டார்
நம்பிக்கையூட்டி குணமடைய எத்தனை முயற்சிகள்
அத்தனையும் பயனில்லை என பிடிவாதமாகவே இருந்தீர்
பார்த்திருக்கும் போதே துடித்துத் துடித்து ஓடிவிட்டீர்

கண்ணை விட்டு அகலவில்லை கண்ட காட்சியெல்லாம்
பாசம் வைத்த எம் தாய் படும் துயரம் பார்க்க முடியவில்லை
மாண்டவர் மீண்டும் எழுவதில்லை என அறிந்திருந்தும்
உம் வரவுக்காய் காத்து நிற்கின்றோம் அப்பா...

அன்பு மகள்
**தர்மிலா**

# கண்ணில் கண்ணீராய்

## வடியும் காலத்தின் சோக அலைகள்

**மாலைப்** பொழுது வரும் முன்னே

எங்கள் சூரியன் மறைந்தது

கரையை தொடும் முன்னே

சந்தோஷ அலைகள் ஓய்ந்தன

நடப்பது மெய்யோ பொய்யோ

எனும் மயக்கத்தில் கதறவிட்டு

எங்கு சொல்லாமல் சென்று விட்டீர்கள் அப்பா!

எனை கீர்த்தி மகள் என்று யார் அழைப்பார்?

ஒரு முறை கண்ணெதிரே வாருங்கள் அப்பா

ஒவ்வொரு அடியிலும் கடைசிவரை

என் கரம் பிடித்து நடந்தீர்களே அப்பா!

இறுதி வார்த்தையாய் 'ஏன் அழுகிறாய், அழாதே'

என்று சொல்லிப் போனீர்களே அப்பா!

இன்று அழுது அழுது அழைக்கிறேன்

ஒரு முறை வாரும் அப்பா!

கிரி உங்களை மாமா என்றழைத்ததில்லை

அப்பா என்றழைப்பார் இனி
யாரை அழைத்திடுவார் அப்பா!
கிச்சு எங்கு சென்றாலும் உங்களிடம்
சொல்லாமல் செல்ல மாட்டான்
உங்கள் மூச்சற்ற உடல் கண்டு
ஏங்கிவிட்டான் அப்பா நான்
என்ன பதில் கூறுவேன் அப்பா!
நாங்கள் என்ன முடிவு எடுத்தாலும்
உங்களின் இறுதி பதிலுக்காய் காத்திருப்பேனே அப்பா!
இனி யாரிடம் முடிவு கேட்பேன் அப்பா!
உங்கள் இறுதிப்பயணம் கண்டு நொறுங்கிவிட்டேன் அப்பா!
உங்களைப் போல் இனி கிடைக்குமா அப்பா!
மீண்டும் ஒரு ஜென்மத்தில் உங்கள மகளாக
பிறப்பதற்கு காத்திருக்கிறேன் அப்பா!

**கீத்தி**
மகள்

**சிக்கல்களை எதிர்கொள்ளும் போது**

**கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.**


21


ROCK STAR



# ஆலவிருட்சம் சாய்ந்ததே !

ஆலம் விழுதுகளாகிய எமை தாங்கிய
ஆலவிருட்சம் ஆனீரே!
ஆலமரம் சாய்ந்து விட்டது – இன்று
ஆலம் விழுதுகள் நாம் என்னசெய்வோம்!
நீங்கள் பிரிந்துபோன துயர் தரும்
வலிகளில் ஏங்குகிறேன் அப்பா!
உங்கள் ஞாபகங்கள் நினைவில் அரும்ப
மனம் புலம்புகிறேன் அப்பா!

கண் இமைக்க முதல் காலன்
உங்கள் உயிர் பறித்தது
பொய்யாகிப் போகாதோ என – என்
மனம் ஏங்குது அப்பா!
ஆயிரம் உறவுகள் அருகில் இருந்தாலும்
நீங்கள் இருப்பது போல்
தோணாதப்பா எனக்கு; அறிவாய் நீர்
இன்று என்னை தவிக்கவிட்டாய் அப்பா!

சின்னதாய் ஓர் அன்புச் சண்டை போட்டு
செல்லமாய் எனை அணைத்திடுவாய்
தொலைதூரம் நான் சென்று விட்டால்
தொலைபேசியில் அடிக்கடி விசாரிப்பீர் –

நீங்கள்தொலைதூரம் சென்றுவிட்டீர் என்னை விட்டு
எப்போதினி உங்களை காணமுடியும் - என
நினைக்கும் போது எல்லாம்
தொலைந்து போகிறேன் அப்பா!
ஊரவர்க்கும் ஆலயத்திற்கும் தானங்கள் பல - செய்த
உங்கள் உதவிக் கரங்கள் எங்கே அப்பா!
புன்னகை பூத்த முகம் தான் எங்கே?
என, தேடுகிறேன் அப்பா - நீங்கள்
வாழ்ந்த வாழ்க்கையில் செய்த தியாகங்களை
எண்ணுகிறேன், என்னுள் பெருமிதம்
அடைகிறேன்
உங்கள் மகளாய் பிறந்ததை எண்ணி - ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயரில் இன்னும்
மீளாதவளாய் புலம்புகிறேன் - அப்பா!

**மகள்**
**துஷி**
(Chu Mahal)

**கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே**
**அது உன்னை கொன்றுவிடும் கண்ணை**
**திறந்து பார் நீ அதை வென்று விடலாம்.**

# அன்புள்ள அம்மப்பா

என்னை அன்போடு வளர்த்த அம்மப்பா
நீங்கள் நீண்ட தூரம் சென்றும்
என்னை மறந்து விடாதீர்கள்
நீங்கள் என்னைப் பிரிந்தாலும்
நாம் உங்களை மறக்கமாட்டேன்

பாடசாலை முடிந்தவுடன் உங்களை
முதன் முதலாக வந்து பார்ப்பேனே
இனி நான் யாரை ஓடி வந்து பார்ப்பேன்?

நீங்கள் என்னிடம் வந்து உதவி கேட்டீர்களே
நாம் யாருக்கு இனி உதவி செய்வேன்?
செல்லமாக என்னுடன் சண்டை போடுவீர்களே
இனி யாருடன் நான் சண்டை போடுவேன்...?

அன்புப் பேரன்
**அ. கேஷாங்கன்**

# தாய்மாமா (அச்சா)

**"அச்சா"** என்ற சொல்லுக்கு தனித்துவமான ஒருவராக விளங்கியவர் நீங்கள்...

எங்கள் அனைவர் குடும்பத்தில் உள்ள உங்கள் மரு மக்களுக்கு மட்டும் அல்லாது அவர்களை திருமணம் செய்தவர்களும், ஏன் அவர்களின் குழந்தைகளும் கூட உங்களை "அச்சா" என்று தான் கூப்பிடுகிறார்கள்.

இனி யாரை நாங்கள் "அச்சா" என்று கூப்பிடுவது என நினைக்கும் போது நெஞ்சம் பொறுக்குதில்லையே! அச்சா!

நீங்கள் சுபா அக்காச்சியை மருத்துவ நிமித்தம் கண்டிக்கு கொண்டு சென்றதில் இருந்து அவரின் இறுதிக்கிரியை வரை நீங்கள் செய்த ஒவ்வொரு உதவிகளும் இன்றும் எங்கள் கண்முன் வருகின்றது அச்சா!

திருகோணமலையில் நாங்கள் வசிக்கும் போது அங்கு வந்து எங்கள் பாடசாலை முன் நின்று எங்களை உங்கள் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு செல்வதும், அங்கு உள்ளவரிடமும் அன்பாக பழகுவதுடன், அவர்களும் கூட உங்களை "அச்சா" என்று ஆசையாக அழைப்பதை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்வீர்களே அச்சா!

எங்கள் களுவாஞ்சிகுடி வீட்டிற்கு "லட்சுமி வாசா" என்ற பெயர்ப் பலகை எழுதிப் போட்டதை மறக்கவே முடியாது அச்சா!

நீங்கள் சிறிது காலம் களுவாஞ்சிக்குடியில் எம்மோடு சேர்ந்து வாழ்ந்த காலம் ஒரு பொற்காலமே அச்சா!

எங்கள் அம்மா அடிக்கடி சொல்லும் வார்த்தை “அச்சா மாதிரி ஒரு சகோதரம் எந்த ஜென்மத்திலும் யாருக்கும் கிடைக்காது” அப்படிப்பட்ட ஒரு பொக்கிஷம் அச்சா, நீங்கள்....

உங்கள் பிரிவை கனவிலும் ஏற்றுக்கொள்ள முடியாத உங்கள் மூத்தக்காவிற்கு என்ன பதில் சொல்வது என்று சொல்லாமல் சென்று விட்டீர்களே அச்சா!!

உங்கள் பிரிவால் ஆழ்ந்த துயருறும்
**மூத்தக்கா**
மற்றும் பிள்ளைகள்

**ஒரு முறை வந்தால் அது கனவு இருமுறை வந்தால் அது ஆசை பல முறை வந்தால் அது இலட்சியம்.**

# அன்புத் தம்பியின் இறுதிப்பயணம்

**அக்கா** என அழைக்க அருகில் நீ இருந்தாய் இனி
தம்பி என்று அன்புடன் யாரை நான் அழைப்பேன்...?
தம்பி உன் சேதி கேட்டதும் எம்மனம்
அடியற்ற மரம் போல் சாய்ந்தது விட்டதே...

எம்மை தவிக்க விட்டுச் சென்றார்
என கண்ணீர் விடுவதா...
அல்லது எம்முடன் வாழ்ந்தார் என
எண்ணி மகிழ்வதா...
அவர் திரும்பி வருவார் என கண்கள்
மூடி பிரார்த்திப்பதா...
அல்லது அவர் விட்டுச் சென்ற நினைவுகளால்
அமைதியடைவதா...
அவர் பயணம் சற்றே தொடங்கியது
எம்மை விட்டு எங்கும் செல்லவில்லை
எங்கோ அமைதியாக தூங்குகிறார்

நேசம் போகாது என்றென்றும் எங்கள் நெஞ்சங்களில்
வாசம் போகாது உன் வாடா மலர்களில்
பாசத்தோடு எங்கள் நெஞ்சங்களில் குல விளக்காக
பசுமரத்தாணி போல் என்றென்றும்
நின்றீர்களே அச்சா...

அக்கா **பரமேஸ்வரி அருள்நாயகம்**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**







# திரும்பி வருவாயா ?

**அன்பான** தம்பி! பண்பான தம்பி! பாசமுள்ள தம்பி! உன்னை எப்படி மறப்பது? தம்பியாக பிறந்தாலும் எம் குடும்பத்துக்கு அப்பாவாக பல கடமைகளைப் புரிந்து குடும்பத்தை தாங்கிநின்ற ஆலமரமையா நீ! உன் உடன் பிறப்புக்கள், மனைவி, மக்கள் கதறி அழ எங்கு சென்றாய் ஐயா! மனம் நொந்து அழுகின்றோம். எங்கு இருக்கின்றாய்.

மானிடராய்ப் பிறந்தவர் மண்ணில் மடிவது இயற்கைதான் என்றாலும் உன் பிரிவு ஈடுசெய்ய இயலாத ஒன்றாய் விட்டது. நாங்கள் இறக்கும் வரை மறக்கமுடியாத நிகழ்வு.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"
என்பதற்கிணங்க வாழ்நாளில் வாழ்ந்து காட்டிய பெருமகன் நீ

ஆலமரம் போன்று நிழல் தந்து காப்பாற்றிய பெருந்தகை. எல்லாம் வல்ல ஆண்டவன் உன் ஆத்மா சாந்தியடைய அருள்புரிய வேண்டிநிற்கும் பேபி அக்கா. தம்பி திரும்பி எங்களிடம் வருவாயா! உன்னைக் காணாமல் தவிக்கும்,

அக்கா

**திருமதி. அருந்ததி சுப்பிரமணியம்**

குடும்பத்தார்

# குலத்திற்கு ஓர் தலவிருட்சம்

**ஒவ்வொரு** குடும்பங்களும் பெற்ற அரும் தவப்பயன் அக் குடும்பத்திற்காக அணையா விளக்காய் சுடர்மிகு ஒளி விளக்காய் அனைவருக்கும் கரை காட்டும் கலங்கரை விளக்காய் பிள்ளைகள் கிடைப்பது. அந்த வகையிலே களுவாஞ்சிகுடி நகரின் நன்கு கற்றறிந்த குடும்பமான சிவனேசராசா – வள்ளிமுத்து தம்பதியினரின் ஆறு பெண் குழந்தைகளுக்கு ஒரேஒரு ஆண் வாரிசாக பிறந்து அக் குடும்பங்களை இன்று வரை வழி நடத்திய அற்புத மனிதர் எங்கள் ஆசை அச்சா.

ஒவ்வொரு குடும்பங்களின் அனைத்து நிகழ்வுகளிலும் தனிப்பெரும் ஆலமரமாக நின்று அந் நிகழ்வை திறம்பட சிறப்பாக நிகழ்த்தும் வல்லமை உமக்கு நிகர் நீரே.. இன்று இதற்கான இடைவெளி நிரப்பப்படாமலே உள்ளது. அன்பு முதல் கட்டளை வரை சிரித்த முகத்துடனும் ஆளுமையான பேச்சாலும் அத்தனை சகோதரிகளையும் ஒன்றாக பயணிக்க வைத்தவர் நீங்கள் சமூக சேவைகள் தொடக்கம் சமய சேவை வரை காலம் காலம் உங்கள் திருநாமம் கல்வெட்டாய் பதிந்திருக்கும். ஒவ்வொரு ஆலயங்களிலும் தங்கள் தலைமையில் இடம்பெறுகின்ற திருவிழாக்கள் பக்திமிகு கோலகல திருவிழாக்களாக நடந்திருக்கின்றது.

இனி இதை எங்கு காண்போம்? சைவசமயத்திற்கு நீங்கள் ஆற்றிய தொண்டுகள் ஆத்மார்த்தமானவை, கடமையாக இவற்றை நிகழ்த்தாமல் தன் பிறவிக்கடனாக நிகழ்த்தினீர்கள். அதனால் தானோ பூமியிலிருந்து நீங்கள் ஆற்றிய சேவை போதும், என் பக்கத்திலிருந்து எனக்கு தொண்டாற்று என உங்களை இறைவன் இறுக அணைத்துக்கொண்டான்.

வந்தாரை வாழ வைக்கும் மண், விருந்தோம்பலில் தலைசிறந்த மண் மட்டக்களப்பு. இதனை நிரூபித்தவர் நீங்கள்தான், இதனை நாங்கள் கண்ணூடாக நேரடியாக கண்டிருக்கின்றோம் வீட்டிற்கு யார் வந்தாலும் உங்கள் உதடுகள் உச்சரிக்கும் முதல் வார்த்தை சாப்பிட்டிங்களா? சாப்பிடுங்கள்... அவ் வார்த்தைகளில் அத்தனை பராமரிப்பும் அன்பும் உச்சக்கட்ட அக்கறையும் கலந்திருக்கும். இவ்வார்தையே போதும் எப் பசியையும் பசியாற்றி அகமகிழ்ந்து விட. தங்கள் வாழ்வில் உமக்காக செலவிட்ட நேரங்களை விட உங்கள் சகோதரிகள் அறுவருக்குமாய் செலவிட்ட நேரமும் கரிசனையும் தான் அதிகம்.இப் பாசம் தான் இன்று அவர்களை நல்ல வழியில் வாழவைத்திருக்கின்றது. அவர்களுக்காக மெழுகுவர்த்தியாக உங்களை உருக்கி அவர்களை ஒளிரவைத்ததை நாம் இதயபூர்வமாக நன்றிகளுடன் நினைவில் நிறுத்துகின்றோம். சகோதரிகளுக்கு தாயாக, தந்தையாக, மிகச்சிறந்த வழிகாட்டியாக அவர்களை வழிப்படுத்தி சமூகத்தில் மாபெரும் அந்தஸ்தை வழங்கியுள்ளீர்கள்.

“ஆயிரம் கரங்கள் மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லை” என்பது போல் தங்கள் திறன்கள் எண்ணிலடங்காதவை. மிகச்சிறந்த குடும்ப உறுப்பினராய், ஒப்பற்ற சமூக சேவையாளராய், இணையற்ற சமய பங்காளியாய், மிளிர்ந்தது மாத்திரமின்றி, இறுதிவரை தன்சுய முயற்சிகளால் சமுதாயத்தில் பல முயற்சியாளர்களை உருவாக்கிய ஒரு சமூகசிந்தனையாளர்,முயற்சியாளரும் கூட தொழினுட்ப உத்தியோகத்தர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஓய்ந்து விடாமல் இறுதி வரை மிகச் சிறந்த ஒரு கைத்தொழில்வாதியாக தன்னை நிலைநிறுத்தி, இதன் கீழ் வாழ்வற்ற பலருக்கு வாழ்வாதாரத்தை வழங்கிய மிகச்சிறந்த நிர்வாகி. என்றும் சிரித்த முகத்துடனே உம்மை அறிந்த நாங்கள் இன்று கனத்த மனத்துடன் உம்மை வழியனுப்பி விட்டு தனித்து தவித்து நிற்கின்றோம். பல இழப்புக்களை வாழ்வில் கடந்திருந்தாலும் உங்களுடைய இழப்பு கடந்து செல்லவோ கடத்திச் செல்லவோ இயலாத ஒன்று. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நாராயணனை பிரார்த்திக்கின்றோம்.

என்றும் மறையா நினைவுகளுடன்
**திரு.திருமதி. பண்டரிநாதன்** குடும்பம் சார்பாக
கலைச்சுடர் **யனோபன் பண்டரிநாதன்**

# தங்கை மற்றும் மருமக்கள் புலம்பல்

**எங்களின்** குடும்பச் சொல்லாடலில் தாய் தந்தை போல
பின்னிப்பிணைந்த உறவே "அச்சா மாமா"...
எங்கள் பரம்பரையின் பெருமை மிகு அடையாளம் "அச்சா"
அன்னமிட்டு அரவணைத்து அகமகிழ்ந்த உறவே!
உறவுகளின் மனக்கசப்புக்களை உடைத்தெறிந்து
குடும்பங்களை ஒன்றிணைக்கும் பாசத்தின் கருவான உறவே!
எம் தந்தை மறைவின் திக்கற்ற வேளையில்
கலங்கரை விளக்காக இருந்த உறவே!
நல்லறிவும் நகைச்சுவையும் கலந்து உரையாடி,
அகத்திலும், முகத்திலும் உவகையை உதிர்த்திட்ட எம் உறவே!
தங்கள் மழலைச் சிரிப்பையும், கனிவான பேச்சையும்
காணாது தவிக்கின்றன எங்கள் இதயங்கள்!
ஓர் உறவு!!! ஓராயிரம் நினைவலைகள் !!!
மெய்யது நீங்கி விண்ணுலக சங்கமமாயினும்,
உங்கள் நினைவுகளும் பெருமைகளும் சாகாவரம் பெற்றவையே!

**On the sands of time, you have left your footprints with Glory. Everyone will know your name and Shall recall your story. We miss you "Achcha Maama"**

தங்கள் பிரிவால் துயருறும், பாசமிகு தங்கை
**திருமதி. இரஞ்சனா குருகுலசிங்கம்**
மருமக்கள் - **சுலக்ஷன் விதுஜன்**

# சிரித்துணைக்க விரும்புகின்றோம் அச்சா

**சிந்தை** வாக்கு செயல் மூன்றால் அன்புதனை
சீரோங்க கொடுத்து நின்றீர் அச்சா
கண்ணீர் ஓடி வற்றா வழிந்தோட
மீளமுடியாப் பெருந்துயரில் எம்மை
ஆழ்த்திச் சென்றீரோ!

பகிடிக் கதைகள் கூறி மகிழ்வுற்ற காலம்
ஒன்று கூடி உணவுண்டு மகிழ்ந்த காலம்
திருவிழாவில் இனிதாக வலம் வந்த காலம்
கொழும்பிற்கு வந்து உறவாடிய காலம்
மறவாக்காலமாய் காலன் உமை
கண்கவர்ந்து சென்றது ஏனச்சா!

அச்சா அச்சா என்றறெண்ணி சொல் நோக துடிக்கிறோம்
இனி யாரை அச்சா என்று அழைப்போம்!
நிகரில்லா வதனமதனை இனி எப்போது காண்போம்?
விடை தெரியாது தவிக்கிறோம் அச்சா!

வீட்டிற்கு வருமனைவருக்கும் விருந்தளித்து மகிழ்வீர்
விருப்புடன் மனமகிழ்ந்து மண்ணுலகம் மறந்து
எம்மை விட்டுப்பிரிந்து இன்று விண்ணுலகம் சென்றீரோ!
விதி வலியது மிகவும் கொடியது விதிப்பயன் அதுவே எனஎண்ணி
நீர் எம்மை விட்டுச்சென்றாலும் உம் நினைவது என்றும் எம்மோடு

பாசப்பிணைப்பால் பரிதவிக்கும் எம்மை
ஒருமுறை வாரிச்சிரித்தணைத்துக்கொள்ளுங்கள் அச்சா!
விருப்பமுடன் ஒருமுறை சிரித்தணைத்துக்கொள்ளுங்கள் அச்சா!

விரியும் காலமது பதில் சொல்லுமென காத்திருந்தாலும்
எம்பாசமது ஒருபோதும் குறைந்தது இல்லை
வாய்நிறைய அச்சா என்று அழைக்க
இன்று நீர் இல்லை என ஏற்க முடியவில்லை

கண் இமைக்கும் நொடியில் எம்மை விட்டுப்பிரிந்தீரே அச்சா
ஏங்கித்துடித்தும் இனி என்ன பயன்?
உம் உருவம் எம்முன் இல்லை என்றாலும்
உயிர் மூச்சில் நீர் இருப்பீர் என நாமறிவோம்


விழி மூடும்போதெல்லாம் அச்சிரித்த முகம்
எம்மைப் பார்த்தணைப்பது போல
எப்போது எம்மைச்சிரித்தணைப்பீர் அச்சா


விழி ஏக்கத்துடன் வினா எழுப்பும் அதுவரை
இயற்கையாகி எம்மை சிரித்தணைத்துக்கொள்ளுங்கள் அச்சா!

பாசமுடன்
**சித்திரா, துஷானி, துஷாந்**

**உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக் கொள்.**





# அச்சாவுக்கு நிகர் அச்சாவே

எங்கள் அனைவரினதும் பாசத்திற்கும், நேசத்திற்கும் பாத்திரமாக விளங்கிய, எல்லோராலும் அன்புடன் செல்லமாக "அச்சா" என அழைக்கப்படும் எங்கள் சித்தப்பா அவர்களின் இழப்பு எங்களுக்கெல்லாம் பாரிய இழப்பாகும். அனைவரிடமும் அன்பாக பழகும் குணமும், முன்வந்து உதவி செய்யும் அன்புள்ளமும் கொண்ட எங்கள் அச்சாவின் இழப்பில் இருந்து மீளாதுள்ளோம். எனினும் "ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவதுண்டோ மாநிலத்தே" என்பதற்கிணங்க மனதைத் தேற்றி, மண்ணில் பிறந்தவர்கள் அனைவரும் மரணிக்க வேண்டியவர்கள்தான் என்றாலும், எங்களுடன் இன்னும் சிலகாலம் அச்சா வாழ இறைவன் விட்டுவைக்க வில்லை என்பதே எம் ஏக்கம். அச்சாவின் இறைதொண்டின் நிமித்தம் இறைவன் அவரை விரைவாக எடுத்துக் கொண்டதாகவே மனதை தேற்றுகின்றோம்.

அச்சா ஒழுங்குபடுத்தும் சுற்றுலாக்களில் எல்லா சொந்த பந்தங்களையும் இணைத்துக்கொண்டு சென்று அவர் ஏற்பாடு செய்யும் விருந்துகளையும், சுவும் நகைச்சுவைகளையும், பிள்ளைகளோடு பிள்ளைகளாக மாறி மகிழும் அச்சாவையும் என்றுமே எங்கள் வாழ்நாளில் மறக்கமுடியாது. அதுமட்டுமா, எல்லாக் குழந்தைகளையும் தன் பேரக் குழந்தைகள் போல் அரவணைத்துப் பார்க்கும் உள்ளம் அவருக்கேயுண்டு. எங்கள் சித்தியுடன் ஜோடிப் பறவைகளாய் எல்லா இடங்களிலும் வலம் வரும் உங்கள் தோற்றத்தினை நினைக்க எங்கள் கண்கள் நனைகின்றன அச்சா...

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பதற்கிணங்க தெய்வத்துள் உறைந்த உங்களின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்

**மதி – டிலோ**

குடும்பம்

# சொல்லாமலே

"**இல்வாழ்வான்** என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை"

என்றார் வள்ளுவர். அவ்வாறே எனது இனிய நண்பன் – எனது குடும்ப சம்பந்தி அமரர் திரு. ராஜகுலேந்திரன் எனபவரும் ஓர் சிறந்த இல்வாழ்க்கை வாழ்ந்து வள்ளுவரின் வழியே வாழ்வினை மிகவும் சிறப்பாக அமைத்துக் கொண்டவராவார். தன்னுடைய வாழ்நாளில் அதிகூடியளவு கோயில், புனிதஸ்தலங்களுக்குச் செல்வதுடன் அங்கு அன்னதானம், தண்ணீர்ப்பந்தல் போன்ற மற்றவர்க்கு தானம் வழங்கும் நடைமுறையை அதிதீவிரமாக கைக்கொண்டார். எனக்குத் தெரிந்த வகையில் அவருடன் நட்புக் கொண்டு பழகிய சுமார் 43 வருடகால வரலாற்றில் அவர் செய்த பெரும் சேவையாக ஆலயத் தொண்டையும் அதனுடன் கூடிய தானம் வழங்கும் நிகழ்வையும் என்னால் என்றும் மறக்க முடியாது.

மாமாங்கக் கோயில் தீர்த்தத் திருநாளன்று கோயில் வாசலில் குவிந்திருக்கும் ஏழை, எளிய மக்களுக்கு பிடி அரிசியும், சில்லறை நாணயங்களையும் கொடுப்பதில் மிகவும் விருப்பம் கொண்டவர். மேலும் தம் வீட்டிலிருந்து சோறு, கறி சமைத்து கோயிலுக்குக் கொண்டு சென்று தானம் கொடுப்பதும் அவரது வருடாந்த வழக்கம்

அன்றொருநாள் மாலை 8.00 மணியிருக்கும். நான் வேலை முடித்து வீட்டில் இருந்தவேளை தொலைபேசி அழைப்பு மணி அடிக்கின்றது. நான் அதற்கு பதில்சொல்ல முனைய, 'மச்சான் நாளை காலை 6.00 மணிக்கு நாங்கள், பிள்ளைகள் எல்லோரும் காரிலே புறப்பட்டு வருகின்றோம்.

நீங்களும் பிள்ளைகளுடன் உங்கள் காரில் செல்ல தயாராக இருங்கள் என்றார்' எங்கே என்றேன். உகந்தை மலை முருகன் கோயிலுக்குச் செல்வோம் என்றார் ராஜா. மறுப்பில்லை – புறப்பட்டோம்.

கார்கள் அக்கரைப்பற்றை அடைந்ததும் காரை நிறுத்தி மரக்கறி வகைகள் மற்றும் ஏனைய பொருட்கள் வாங்கினோம். மீண்டும். கார்கள் பறக்கின்றன உகந்தை நோக்கி. அது ஓர் பயங்கரமான காலம். கார்கள் பாணமை STF முகாமை அடைந்ததும் அங்கே நிறுத்தவேண்டி ஏற்பட்டது.

பாணமை **STF** பெரியவர் எங்களை விசாரித்துவிட்டு நீங்கள் சிறு குழந்தைகளுடன் இந்தக் கார்களில் எப்படி இந்த காடான, மணல் செறிந்த பாதையில் போகப் போகின்றீர்கள். உங்கள் கார்கள் அந்த மணலில் ஓடாது. காரில் ஆட்களும், பொருட்களும் கூட உள்ளன என்று எங்களை கார்களை அங்கேயே விட்டு விட்டு தங்களது வாகனத்தில் செல்லும்படி கூறினார். ஆனால் நாங்கள் பயணத்தை தொடர்ந்தோம். எவ்வளவோ பிரச்சினைகளுக்கு மத்தியில் உகந்தைக் கோயிலை அடைந்தோம். ஆக முடிவில் என்னைப் பார்த்து பயந்திட்டன் மச்சான், –ஆனால் உகந்தை முருகன் கொண்டு சேர்ந்திட்டாரு' என்றார். நாங்கள் இரு குடும்பமும் முதன்முதலாக பயணித்த ஓர் பயங்கரமான, ஆனால் எங்களால் என்றுமே மறக்க முடியாத ஓர் இனிய பயணமும் அதுதான். மஞ்சள் வாளி எங்கே? மகிழ்வான பாடல் எங்கே? பாடுவதிலும் நல்ல குரல் வளம் கொண்ட எனது ராஜா மச்சான் படித்தானே ஓர் பாடல். கடந்த சித்திரையில் எனது வீட்டில் இரவிரவாக அவரது பாட்டுக்கள் எங்களை மயங்க வைத்தன.

தோல்வி நிலையென நினைத்து மனிதன் வாழ்வை இழக்கலாமா? என்று பாடியே எங்கள் ராஜா தனது வாழ்வை இழந்து விட்டது எனது வாழ்வில் ஓர் தோல்விதான்.

